






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 16 30.04.2026



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

## பரமபதசோபானம்

9-படிகளாவன:-

(1) தத்துவங்கள் முதலிய வற்றை வகுத்து அறிதல்
(2) மனந்தளர்தல்
(3) உலகஸுகங்களில் ஆசையறுதல்
(4) தம் பாபங்களின் மிகுதியால் இனி வரக்கிடக்கும் நரகா நுபவம் முதலிய துன்பங்களுக்கு அஞ்சுதல்
(5) எம்பெருமான் மோக்ஷத்தை அருள்வதற்குக் காரணமான உபாயத்தை அநுஷ்டித்தல்
(6) இச்சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறுதல்
(7) அர்ச்சிராதிமார்க் கத்தால் செல்லுதல்
(8) ஸ்ரீவைகுண்டமென்னும் திவ்யலோகத்தைச் சேர்தல்
(9) அங்கு ஸர்வேசுவரனைக் கண்ணாரக் கண்டு களித்து அனு பவித்து அந்த ஆநந்தத்திலேயே மூழ்கிக்கிடத்தல்.

இந்த 9-விஷயங் களையும் இப்பிரபந்தத்தில் சுருக்கியும், ரஹஸ்யத்தில் மிக விரித்தும் அருளியிருக்கிறார் ஸ்ரீ தேசிகன்.

*****************************************************************

ஸர்வேசுவரன் பெரியதிருவடியை வாஹநமாகவும் ஆஸனமாகவும் கொண்டவன்; அந்தணர்க்கு அழியாச்செல்வமா கிய வேதாந்தங்களால் போற்றப்பட்டு அவற்றை உறைவிடமாகக்கொண் டவன்; பிராட்டி அவதரித்த திருப்பாற்கடலில் நித்யவாஸம்செய் பவன்; ஆயினும் இந்த ஸ்தானங்களைக்காட்டிலும் ஸ்ரீரங்கம் முதலிய திவ்யதேசங்களிலேயே மனமுவந்து வாழ்ந்து அடியார்களுக்கு அருள் புரிகின்றான். அவன் உலகத்தை வாழ்விக்க முன்பு அருளிய பகவத் கீதையின் தாத்பர்யத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் தமது பாஷ்யத்தின் வாயி லாக விளக்கியருளினார். அவருக்கு அந்தரங்க கைங்கர்யம் செய்து ஸர்வார்த்தங்களையும் பெற்ற திருமடைப்பள்ளியாச்சான் வழியாக வந்த ஸாரார்த்தங்கள் நம்முடைய ஸூக்திகளில் அடங்கிநிற் கின்றன.

*****************************************************************

நாம் இதுகாறும் தத்துவங்களைப்பற்றிய விபரீதஜ்ஞா நத்தையே பெற்றுக் கொடிய கர்மங்களை மேன்மேலும் செய்து அஜ் ஞாநமாகிய இருளில் மூழ்கிச் சப்தம் முதலிய அற்பவிஷயங்களையே போக்யமாய்க்கொண்டு அந்தப் பெருஞ்சேற்றில் மூழ்கிக்கிடந்தோம், இத்தகைய நம்மை

வாழ்விக்க வேதவேதாந்தங்கள் கருணைகொண்டு விவேகத்தை உபதேசித்தன. பரமபதத்திற்கு உரிய ஒன்பது படி களுள் முதலாவதாகிய விவேகத்தை இந்த ரஹஸ்யத்தில் முதல் பர்வத்தில் பார்த்தோம்.

*************************************************************

உலகில் சிலர் சேதநாசேதநங்களின் ஸ்வரூபம் முதலிய வற்றை நன்கு அறிந்திருக்கலாம்; அருமையான பல கலைகளைத் தாம் கற்றுப் பிறருக்கும் உபதேசிப்பவராயிருக்கலாம்; பல தர்மங்களைத் தாம் அநுஷ்டித்துப் பிறரையும் அநுஷ்டிக்குமாறு செய்திருக்கலாம்; வேதத்தின் ஸாரார்த்தங்களைப் பிறருக்குப் போதிப்பவராயிருக்கலாம். இருந்தும் என்ன பயன்? ஸம்ஸாரத்திலிருந்து சேதநரைக் கரையேற் றும் ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்வரூபம் ஸ்வபாவம் முதலியவற்றை அறியாவிடின் மோக்ஷத்தின் படியில் ஏறமுடியாது.

*************************************************************

ஸ்ரீவத்ஸமென்னும் மறுவையும் ஸ்ரீவைஜயந்தி என் னும் வனமாலையையும் பெரிய பிராட்டியையும் தன் திருமார்பில் தரித்த ஸர்வேசுவரன் சாஸ்த்ரங்களின்வாயிலாக இட்ட கட்டளையை அஜ் ஞாகத்தால் மீறி நடப்பவர்கள் கொடிய நரகங்களை அநுபவிக்கின்ற னர். விவேகிகள் இதை ஆராய்ந்துபார்ப்பர்; இதுகாறும் தாமும் ஸம்ஸாரத்தில் உழன்றமையை நினைத்து வெறுத்து, கழிந்த நிலை மைக்கு வெட்கமுறுவர்; பின் வேதாந்தங்களில் கூறிய உபாயத்தை அநுஷ்டிக்க விரைவர்.

*************************************************************

விவேகம்பெற்ற சேதநன் ப்ரளயகாலத்தில் தான் சரீர - இந்திரியங்களை இழந்து, அறிவிழந்து மஹாதமஸ் என்னும் பேரிருளில் ஒன்றுபட்டுக் கிடக்கும் நிலையையும், ஸ்ருஷ்டிகாலத்தில் யுகக்கணக்கில் பற்பலவகைச் சரீரங்களைத் தந்து வாட்டுகின்ற கர்ம வெள்ளத்தில் கரைகாணாது உழல்வதையும், தேன் கலந்த விஷம் என்று கூறலாம்படி இனியனவாய்த் தோற்றுகின்ற அற்பபலன் களையே சிறந்தனவாய்க்கொண்டு தானே அநுபவித்துவருவதையும், இன்னும் தான்படும் பல துன்பங்களையும் தானே ஆய்ந்து பார்த்து மனந்தளர்ந்தானாகில் தக்க உபாயத்தை அநுஷ்டிக்கப்பெறுவான். இங்ஙனம் மனந்தளர்தலே இரண்டாவது படியாகும்.

*************************************************************

இக் கர்மபூமியில் மிகச் சிறந்தவராய் நாம் மதிக்கும் பலர் அநுபவிக்கும் பலன் முழுதும் ஸுகரூபமாகவேயிருப்பதில்லை; அதன் நடுவே துக்கமும் கலந்தே நிற்கின்றது. ப்ரஹ்மதேவன் தன்

லோகத்தில் நம்மால் அளவிடப்போகாத ஆநந்தத்தை அநுபவிப்பானெனக் கருதுகின்றோம். அவன் மது-கைடபர்களால் பட்ட துன்பம் எல்லையற்றதாம். இவற்றை ஆராய்ந்துபார்க்கும் விவேகிகள் இந்த ஸம்ஸாரத்தில் ஆசைகொள்ளாது வெறுப்புறுவர்.

**************************************************************

